# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின் அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல. 7,302 — 1922 ம் ஹு மார்கழிமீ 22 ந் திகதி வெள்ளிக்கிழமை.


## Part IV. — நான்காம் பாகம்.

### அரசாட்சியாரின் தேள்வைக்காகிய காணி விளம்பரங்கள்.

1876 ம் ஹு-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் துறைமுகத்து றயில்வே தொடுவை என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இலக்கம் 18,094. குறிச்சி—பாலத்துறை.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. | று. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 1 | மகவத்தேவத்த | வெறு நிலம் | டி. சைமொன் பெரீரா | 0 | 0 | 0·95 |
| 2 | ஷை | ஷை | அப்டுல் கவ்வுர் | 0 | 0 | 1·12 |
| 3 | ஷை | ஷை | பி. எஸ். பெரீரா | 0 | 0 | 1·17 |
| 4 | ஷை | ஷை | சி. ஈ. தளரத்தின | 0 | 0 | 1·56 |
| 5 | மகவத்த | புல் நிலம் | பி. ரி. பெரீரா | 0 | 0 | 2·36 |
| 6 | 34 ம் இலக்கம் | கற்சிவரின் பகுதியுள்ள உயர்ந்த நிலம் | சி. டி. எஸ். விஜேரத்தின | 0 | 0 | 0·25 |
| 7 | மகவத்த | புல் நிலம் | பெஞ்சமின் சில்வா | 0 | 0 | 6·87 |
| 8 | ஷை | ஷை | சி. எம். ஶ்ரேயல் | 0 | 0 | 2·37 |
| 9 | ஷை | ஷை | டி. ஜே. அரசகுலரத்தின | 0 | 0 | 1 |
| 10 | ஷை | ஷை | எஸ். ஆர். டி. பொன்சேகா | 0 | 0 | 3 |
| 11 | ஷை | ஷை | டபுள்சு. டீ. ஏ. பெர்னண்டோ | 0 | 0 | 4·30 |
| 12 | ஷை | ஷை | ஶ்ரீமனாதன் செட்டி | 0 | 0 | 13 |
| 13 | ஷை | புல் நிலம், சேற்று நிலம், உயர்ந்த நிலங்களின் பகுதிகள் | பி. பி. பெரீரா | 0 | 0 | 3·82 |
| 14 | ஷை | சேற்று நிலம் | சூலியான ஆச்சி | 0 | 0 | 1·84 |
| 15 | ஷை | ஷை | மு. சுப்பையா செட்டி | 0 | 0 | 1·10 |
| 16 | ஷை | ஷை | ஜே. பி. டி. சேரம் | 0 | 0 | 8·84 |
| 17 | ஷை | ஷை | டானியல் பெர்னண்டோ | 0 | 0 | 8·46 |
| 18 | ஷை | ஷை | ஜே. பி. டி. சேரம் | 0 | 0 | 8·84 |
| 19 | ஷை | ஷை | ஶ்ரீமனாதன் செட்டி | 0 | 0 | 5·35 |
| 20 | ஷை | புல் நிலம் | கொழும்பில் இருக்கும் ஶ்ரீமன் கத்தோலிக்க ஆச்பிசப் | 0 | 0 | 30·38 |
| 21 | ஷை | ஷை | கொழும்பு முயூனிசிப்பல் சங்கம் | 0 | 0 | 1·75 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ் செய்யும்படி 1876 ம் ஹு-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனை செய்திருப்பதனால், அக்காணிகளை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ் செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1923 ம் ஹு ஜனவரி மாசம் 29 ந் தேதியிலன்று 12 மணிக்கு இந்தக் கந்தோரில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்தில் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கொழும்புக் கச்சேரி,
1922 ம் ஹு டிசம்பர்மீ 16 ந் உ.

ஜே. ஜி. பிறேசர்,
மேல்மாகாண அரசாட்சி ஏசண்டு.

1876 ௵-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் பாணந்துறைப் பட்டிணத்தைத் திருத்தும் பொருட்டு, கொழும்பு காலி றோட்டின் 17 ம் கட்டையை சற்றே தள்ளிப் புதிய றோட்டை உண்டாக்குவது என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது:—

பிரதமபடத்து இலக்கம் 17,562. குறிச்சி—பட்டிய வடக்கும், வலானையும்.

| துண்டு. | காணியினது பெயர். | | விவரம். | | உரித்தாளியின் பெயர். | | விசாலம். ஏ. ரூ. ப. | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 12 | தெல்ககவத்தை | .. | தென்னந்தோட்டமும் கிணறும் | | டீ. ஏ. அபயசேகரவும் இன்னொருவரும் | .. | 0 | 0 | 39·04 |
| 12A | வெலிபிற்றியவத்தை | | தென்னந்தோட்டம் | .. | டீ. ஜே. ஜயசுந்தரவும் மறுபேரும் | .. | 0 | 0 | 21·93 |
| 51 | அம்பககவத்தை | .. | வெண்தரை | .. | டீ. கே. ரத்னாயக காமினேயும் மறுபேரும் | | 0 | 0 | 14·89 |
| 51A | ஷை | .. | ஒரு தென்னைகொண்ட நிலம் | | ஷை | .. | 0 | 0 | 3·91 |
| 51B | ஷை | .. | ஷை | .. | ஷை | .. | 0 | 0 | 6 |
| 52 | ஷை | .. | தென்னந்தோட்டம் | .. | எச். டீ. பீரிசும் மறுபேரும் | .. | 0 | 0 | 7·27 |
| 52A | ஷை | .. | வெண்தரை | ... | ஷை | .. | 0 | 0 | 0·17 |
| 52B | ஷை | .. | ஷை | .. | ஷை | .. | 0 | 0 | 0·56 |
| 90 | வெலிபிற்றியவத்தை | | தென்னந்தோட்டமும் காணின்பகுதியும் | | டீ. ஜே. ஜயசுந்தரவும் மறுபேரும் | .. | 0 | 0 | 9·53 |
| 90A | ஷை | .. | ஷை | .. | ற்றீ. எச். பெர்னாந்து | .. | 0 | 0 | 5·82 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ் செய்யும்படி 1876 ம் ௵-த்துக் காணி எடுத்துக் கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதி யவர்கள் எனக்குக் கற்பனை செய்திருப்பதனால், அக்காணிகளை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1923 ம் ௵ ஜனவரி மாசம் 29 ந் தேதியிலன்று காலை 10 மணிக்குக் களுத்துறைக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

களுத்துறைக் கச்சேரி,
1922 ம் ௵ டிசம்பர்௴ 15 ந் ௳.

ஈ. ற்றீ. மிலிங்டன்,
உதவி அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் எலி உள்ளேபோகக்கூடாத தானியம்வைக்கும் கட்டிடம் கட்டுவதற்காக என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது:—

பிரதமபடத்து இலக்கம். 7,374. குறிச்சி—கற்றன்.

| துண்டு. | காணியினது பெயர். | | விவரம். | | உரித்தாளியின் பெயர். | | விசாலம். ஏ. ரூ. ப. | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | கற்றன்தோட்டம் | .. | வெறுநிலம் | .. | சி. ஈ. ஏ. டயாஸ் | .. | 0 | 0 | 30·2 |
| 2 | ஷை | .. | தே முதலியன | .. | ஷை | .. | 0 | 0 | 15·1 |
| 3 | ஷை | .. | கட்டிடங்கள் முதலியன | .. | ஷை | .. | 0 | 0 | 12·9 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ௵-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணிகளை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1923 ம் ௵ யனவரிமாசம் 22 ந் தேதியிலன்று இரண்டரை மணிக்கு கற்றன் லோக்கல்போட் கந்தோரில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கண்டிக் கச்சேரி,
1922 ம் ௵ டிசம்பர்௴ 22 ந் ௳.

டபிள்யு. எல். கிண்டேர்ஸ்லி,
அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் யகலதென்னையில் மகமதிய பாடசாலைக்காக என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படுங் காணியை, அஃதாவது:—

பிரதமபடத்து இலக்கம். 7,424. குறிச்சி—யகலதென்னை, யற்றிறுவர.

| துண்டு. | காணியினது பெயர். | | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. ரூ. ப. | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | பள்ளியவத்தை | .. | பாடசாலையுள்ள தோட்டம் | யகலதன்னை பள்ளிக்கு மேற்பார்வைக்கு ஏற்படுத்தப்பட்டவர்கள் | 0 | 0 | 14·5 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ௵-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணியை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1923 ம் ௵ யனவரி மாதம் 18 ந் தேதியிலன்று இரண்டு மணிக்கு கண்டிக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கண்டிக் கச்சேரி,
1922 ம் ௵ டிசம்பர்௴ 22 ந் ௳.

டபிள்யு. எல். கிண்டேர்ஸ்லி,
அரசாட்சி ஏசண்டு, ம. மா.

8542

1876 ம் ஹூ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தின்து 7 ம் பிரிவின் பிரகாரம் கிரேகிலீ விண்டுலா ரோட்டிலே 23 ம் கட்டைக்குச் சமீபத்திலிருக்கும் கல்லுக்குழியை பெருப்பிக்கிறது என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது:—

| | | பிரதமபடத்து இலக்கம் 7,393. குறிச்சி—கிம்புலே. | | விசாலம். |
|---|---|---|---|---|
| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | ஏ. று. ப. |
| 1 | கல்லுக்குழி .. | கல்லுக்குழி .. | தலவாக்கெலேதோட்டம் .. | 0 0 17·5 |
| 2 | தலவாக்கெலேதோட்டம் .. | தேயிலே .. | 60249 ம் இலக்கமுள்ள காணியின் சொந்தக்காரன் | 0 0 0·5 |
| 3 | ஷை .. | பாழ்நிலம் .. | ஷை .. .. | 0 0 1·3 |
| 4 | ஷை .. | தேயிலே .. | ஷை .. .. | 0 0 16·3 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஹூ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதி யவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணிகளை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ் செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1923 ம் ஹூ பிபர்வரி (மாசி)மாசம் 17 ந் தேதியிலன்று 10 மணிக்கு நுவரெலியாக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

நுவரெலியாக் கச்சேரி,
1922 ம் ஹூ டிசம்பர்மீ 5 ந் உ.

ஈ. டீ. டைசன்,
அரசாட்சி ஏசண்டு.

---

### உரிமைபெறும் யாழ்நிலத்தின் முன்னறிவிக்கல்களைக் குறித்த விளம்பரங்கள்.

[அறிவித்தல் இலக்கம் 8,242, கொழும்பு.]

**1897 ம், 1899 ம், 1900 ம், 1903 ம் ஆண்டுகளின் வெண்நிலங்களைப்பற்றிய அறிவித்தல்.**

இதிலே பின்னர்ச் சொல்லப்படும் காணிகளிலே ஏதும் உடந்தை யுள்ளவர்களென உரித்துப்பேசுபவர்கள் யாருமுண்டானால், அவர்கள் 1922 ம் ஹூ டிசம்பர் (மார்கழி)மீ 22 ந் தேதியிலிருந்து மூன்று மாசத்துள்ளே கொழும்புக் கச்சேரியில் கொழும்பு நீர்கொழும்பு டிஸ்திறிக்குகளின் உப உதவி அரசாட்சி ஏசென்று அவர்கள் முகதாவில் எழுத்து மூலமாகத் தெரிபட்டு சொல்லப்பட்ட காணிகளுக்கு அல்லது அதிலே யாதும் உடந்தைக்கு உரித்துண்டெனச் சாதித்தாலன்றி, சொல்லப்பட்ட காணிகள் உப உதவி அரசாட்சி ஏசென்று அவர்களுக்கு சொல்லப்பட்ட சட்டங்களினால் கொடுக்கப்பட்டிருக்கும் தத்துவங்களின் பிரகாரம் உரித்துப் பேசப்படாததாகிய குறித்த காணிகள் முடிக்குரியதென அவர்களுடைய கையொப்பத்தோடு எழுத்திலே வெளிப்படுத்துவார்கள் என்பதை அறிந்துகொள்க.

எல். எல். கன்ரர்,
கொழும்பு நீர்கொழும்பு டிஸ்திறிக் உப உதவி அரசாட்சி ஏசண்டு.

கவனிப்பு—மேற்சொல்லிய காணிக்கூடாக விருக்கும் வளிப்பாதை உரித்து காணியிலுள்ள சோந்தைக்குரித்து.

**குறித்த காணிகளின் விபரம்.**

மேல் மாகாணம், கொழும்பு டிஸ்திறிக், சல்பிற்றி கோறளையில், பல்லேபத்துவில் மாவித்தர என்னுங் கிராமத்திலுள்ள இத்துட னிணைத்திருக்கும் படப்பிரதியில்* விபரித்தபடியே கீழ்க்குறிக்குங் காணித்துண்டுகள்:—

| காணித்துண்டு. | காணிப் பெயர். பிரதமபடம் 16,053. | | | | விசாலம், ஏ. று. ப. |
|---|---|---|---|---|---|
| 1 .. | வெவதெனிய அல்லது மாவிற்றவெவ | .. | .. | .. | 0 0 35 |
| 2 .. | ஷை | .. | .. | .. | 0 1 1 |
| 3 .. | ஷை | .. | .. | .. | 1 1 15 |
| 4 .. | ஷை | .. | .. | .. | 0 0 2 |
| | | | | | 1 3 13 |

எல்லைகளாவன: வடக்கு-186,971 ம் உ. ப. ல் விபரித்திருக்கும் காணி; கிழக்கு-மாவித்தரக் குளக்கட்டு; தெற்கு-252,305 ம் உ. ப. ல். விபரித்திருக்குங் காணியும்; மேற்கு-23,044 ம் உ. ப. ல் விபரித்திருக்குங் காணியும், ஏ. தொன் ஆபிரகாமும் மற்றவர்களு முரித்தாடும் வெவதெனியவும்.

* இங்கிலீசின் மூன்றும் பாகம் 1669 ம் பக்கத்தின் படத்தைப் பார்க்குக.

---

[அறிவித்தல் இலக்கம் 8,243, திருக்கோணமலே.]

**1897 ம், 1899 ம், 1900 ம், 1903 ம் ஆண்டுகளின் வெண்நிலங்களைப்பற்றிய அறிவித்தல்.**

இதிலே பின்னர்ச் சொல்லப்படும் காணிகளிலே ஏதும் உடந்தையுள்ளவர்களென உரித்துப்பேசுபவர்கள் யாருமுண்டானால், அவர்கள் 1922 ம் ஹூ (டிசம்பர்) மார்கழிமீ 22 ந் தேதியிலிருந்து மூன்று மாசத்துள்ளே திருக்கோணமலே கச்சேரியில் உதவி அரசாட்சி ஏசென்று அவர்கள் முகதாவிற் தெரிபட்டு சொல்லப்பட்ட காணி அல்லது அதிலெதற்காவது அல்லது அதிலே யாதும் உடந்தைக்கு உரித்துண்டெனச் சாதித்தாலன்றி, சொல்லப்பட்ட உதவி அரசாட்சி ஏசென்று அவர்களுக்கு சொல்லப்பட்ட சட்டத்தினால் கொடுக்கப்பட்டிருக்கும் தத்துவங்களின் பிரகாரம் உரித்துப்பேசப்படாத குறித்த காணிகள் முடிக்குரியதென அவர்களுடைய கையொப்பத்தோடு எழுத்திலே வெளிப்படுத்துவார்கள் என்பதை அறிந்துகொள்க.

ஆர். எம். எம். வோர்ஸ்லி,
உதவி அரசாட்சி ஏசென்று.

**சொல்லப்பட்ட காணிகளின் விவரம்.**

இதன்கீழ் அணைக்கப்படும் படத்தில்* விபரித்திருக்கும் கீழ் மாகாணம் திருக்கோணமலே டிஸ்திறிக்கு திருக்கோணமலே சுகாதார சங்க எல்லைக்குட்பட்ட திருக்கோணமலே பட்டணப் பகுதி 12 ம் நொம்பரிலிருக்கும் பின்வருங் காணித்துண்டுகள:—

| கண்ட இல. | காணியின் பெயர். பிரதமபடம் 5,655. | | | | விசாலம், ஏ. று. ப. |
|---|---|---|---|---|---|
| 1 .. | பாலமவயல்காடு | .. | .. | .. | 0 3 32·35 |
| 2 .. | ஷை (பெரிய ரோட்டுக்காக விடப்பட்ட நிலம்) | | .. | .. | 0 0 17·64 |
| 3 .. | ஷை (சிறு ரோட்டுக்காக விடப்பட்ட நிலம்) | | .. | .. | 0 1 10·33 |
| 4 .. | பாலம்வயல் | .. | .. | .. | 1 1 11·23 |
| 5 .. | ஷை (நீரோடைக்காக விடப்பட்ட நிலம்) | | .. | .. | 0 1 39·13 |
| 6 .. | ஷை (செய்கைபண்ணுமல் விடப்பட்ட நெற்காணி) | | .. | .. | 2 1 9·80 |
| 7 .. | ஷை (பெரிய ரோட்டுக்காக விடப்பட்ட நிலம்) | | .. | .. | 0 3 27·12 |
| | | | | | 6 1 27·60 |

* இங்கிலீசின் மூன்றும் பாகம் 1670 ம் பக்கத்தின் படத்தைப் பார்க்குக.

எல்லை: வடக்கு-காலஞ்சென்ற அ. முத்துக்கிருஷ்ணாவின் உரித்தாளர்கள் உரித்துச்சொல்லும் பாலம்வயல்காடும் (P. P. 573-6,117) முடிக்குரிய பாலம்வயல்காடும்; கிழக்கு-நிலாவெளியிலிருந்து திருக்கோணமலைக்குப் போகும் ரோட்டு; தெற்கு-வண்ணாரச் செல்லன் உரித்துச்சொல்லும் பாலமலயல்தோட்டமும் சின்னப்பர் உரித்துச்சொல்லும் பெரியதொடுவாய்த்தோட்டமும்; மேற்கு-"Love Lane" என வழங்கும் ரோட்டும்.

---

## கேள்விப்பத்திரங்களைப்பற்றிய அறிவித்தல்.

கரைத்தீவிலிருக்கும் உப்புமாலிலுள்ள மூன்று உத்தியோகத்தருடைய வீடுகளைப் பழுதுபார்க்கும் வேலை ஒப்பந்தத்தில் கொடுக்கப்படும்.

2. கேள்விக்காறன் தனது கேள்விப்பத்திரத்தை ஓர் முத்திரித்த உறையிலிட்டு அதின் இடதுபக்கத்து மூலையில் "கரைத்தீவிலிருக்கும் உப்புமாலிலுள்ள 3 உத்தியோகத்தருடைய வீடுகளைப் பழுதுபார்க்கும் ஒப்பந்தக் கேள்வி" யென்று எழுதிப் புத்தளம் உதவி யேசண்டவர்களுக்கு 1923 ம் ஆண்டு தைமாதம் 9 ந் திகதி 1 மணிக்குமுன் கிடைக்கத்தக்கதாக அனுப்பவேண்டும்.

3. கேள்விக்காறன் தனது கேள்விப்பத்திரத்தை யனுப்பமுந்திக் கச்சேரியில் முற்பணமாகப் பத்து ரூபாய் கட்டிப் பெற்றுக்கொண்ட பற்றிச்சீட்டைத் தனது கேள்விப்பத்திரத்தோ டணைக்கவேண்டும்.

4. கேள்விக்காறன் தனது கேள்வி யேற்றுக்கொள்ளப்பட்ட காலத்தில் தான் வேலையைக் கிரமமாக முடிப்பதாக ஞாயமான காலத்துள் உதவி யேசண்டருடன் ஓர் உடன்படிக்கை பண்ணிக்கொள்ளாவிட்டால் கட்டிய முற்பணத்தை யிழந்துவிடுவார்.

5. தனக்குக் காயிதங்கள் கிடைக்கத்தக்கதாக புத்தளத்தில் ஓர் விலாசத்தைக் கேள்விக்காறன் குறிக்கவேண்டும்.

6. உடன்படிக்கை பண்ணிக்கொண்டபின் 5 கிழமைக்குள் குறித்த வேலையை முடித்துப்போடவேண்டும்.

7. இன்னும் வேண்டிய விபரங்களைப் புத்தளம் உப்புத்துரை யவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளவும்.

செய்யவேண்டிய வேலையின் விபரம்.

1. தற்போது அவ்வீடுகளிலுள்ள மரங்களையும் கிடுகுகளையும் எடுத்துப்போட்டு புதிய மரங்களும் கிடுகளும் போடவேண்டும்.

2. மூன்று வீடுகள் வெளிவீடுக ளெல்லாவற்றையும் புதக் கிடுகினால் வேயவேண்டும். அத்துடன் கூரைக்குமேல் பாரமாகப் பூட்டுகளைப் போடவேண்டும்.

3. வேண்டிய இடங்களில் சிவர்களைப் பழுதுபார்த்து வெள்ளையடிக்கவேண்டும்.

4. வீட்டு உள்நிலத்தை மண்போட்டுயர்த்தி மட்டமாக்கி யிறுக்கிச் சாணத்தால் மெழுகவேண்டும்.

5. இரண்டாவதுடைய வீட்டுத் தறையையும் காவல்காறன் வீட்டுத் தறையையும் களிபோட்டு உசத்தி அடித்து சாணியால் மெழுகவேண்டும்.

6. துரை போய்த் தங்கியிருக்கும் வீட்டுத் தறையிலுள்ள களியை வெட்டியெடுத்துப்போட்டு வெள்ளமணல் தூவி அதற்குமேல் புதக்களிபோட்டு தட்டி சாணியால் மெழுகவேண்டும்.

7. துரை போய்த் தங்கியிருக்கும் வீட்டைச் சுத்திவரப் பனைமரத்தின் மட்டையால் கட்டை வேலி அடைக்கவேண்டும்.

8. முதலாவதின் வீட்டுக்கு ஒரு கதவும் பூட்டும் தறப்பும் போடவேண்டும். துரை போய்த் தங்கி நிற்கும் வீட்டுக்கு சர்நீர் ஜோடு புதிதாகப் போடவேண்டும்.

புத்தளங் கச்சேரி,
1922 ம் ஞு மார்கழி 14 ந் உ.

எஸ். எம். பி. வேந்தர்கோன்,
உதவி ஏசண்டருக்காக.

---

## சுப்பிறீங்கோட்டு அறிவித்தல்.

இலங்கைத்தீவிற் சங்கைபோந்த சுப்பிறீங் கோட்டாரது கட்டளையின்படி நாம் பிரசித்தப்படுத்துவதாவது: மேல் மாகாண நியாயஸ்தலத்திலே மேற்சொல்லிய சுப்பிறீங் கோட்டாரால் மேற்கு டிஸ்திறிக்கைசேர்ந்த கிறிமினெல் வழக்கு விசாரணை, 1923 ம் ஆண்டு ஜனவரி மாதம் 10 ந் திகதியாகிய புதன்கிழமை காலமே 10 மணி தொடங்கி அன்றும் அதற்கடுத்த நாட்களிலும் நடத்தப்படும்.

ஆதலால் அவ்விசாரணையிற் காரியகருமமுள்ளவர்க ளெல்லோரும் சொல்லப்பட்ட நேரத்திலே சொல்லப்பட்ட இடத்திலே வெளிப்பட்டு அவ்விடத்தினின்றும் உத்தரவின்றி நீங்காதிருக்கக் கடவர்கள்.

இங்ஙனம்,
டபிள்யு. ட விவேரா,
பிஸ்கால்.

கொழும்பு பிஸ்கால் கந்தோர்,
1922 ம் ஞு டிசம்பர்மீ 16 ந் உ.

---

இலங்கைத்தீவிற் சங்கைபோந்த சுப்பிறீங் கோட்டாரது கட்டளையின்படி நாம் பிரசித்தப்படுத்துவதாவது: கொழும்பு நியாயஸ்தலத்திலே மேற்சொல்லிய சுப்றீங் கோட்டாரால் அவிசாவலை இரத்தினபுரி டிஸ்திறிக்கைசேர்ந்த கிறிமினெல் வழக்கு விசாரணை 1923 ம் ஆண்டு தைமாதம் 10 ந் திகதியாகிய புதன்கிழமை காலமே 11 மணி தொடங்கி அன்றும் அதற்கடுத்த நாட்களிலும் நடத்தப்படும்.

ஆதலால் அவ்விசாரணையிற் காரியகருமமுள்ளவர்க ளெல்லோரும் சொல்லப்பட்ட நேரத்திலே சொல்லப்பட்ட இடத்திலே வெளிப்பட்டு அவ்விடத்தினின்றும் உத்தரவின்றி நீங்காதிருக்கக்கடவர்கள்.

இங்ஙனம்,
எச். டபிள்யு. கொட்றிங்றன்,
பிஸ்கால்.

பிஸ்கால் கந்தோர்,
1922 ம் ஞு மார்கழிமீ 14 ந் உ.

---

இலங்கைத்தீவிற் சங்கைபோந்த சுப்பிறீங் கோட்டாரது கட்டளையின்படி நாம் பிரசித்தப்படுத்துவதாவது: கொழும்பு நியாயஸ்தலத்திலே மேற்சொல்லிய சுப்பிறீங் கோட்டாரால் சிலாபம் புத்தளம் டிஸ்திறிக்குகளைச்சேர்ந்த கிறிமினெல் வழக்குவிசாரணை, 1923 ம் ஆண்டு சனவரி மாதம் பத்தாந் திகதியாகிய புதன்கிழமை காலமே 11 மணி தொடங்கி அன்றும் அதற்கடுத்த நாட்களிலும் நடத்தப்படும்.

ஆதலால் அவ்விசாரணையிற் காரியகருமமுள்ளவர்க ளெல்லோரும் சொல்லப்பட்ட நேரத்திலே சொல்லப்பட்ட இடத்திலே வெளிப்பட்டு அவ்விடத்தினின்றும் உத்தரவின்றி நீங்காதிருக்கக் கடவர்கள்.

இங்ஙனம்,
எஸ். டி. ஸமரஸிங்க,
பிஸ்காலுக்காக.

குருணாக்கல் பிஸ்கால் கந்தோர்,
1922 ம் ஞு டிசம்பர்மீ 13 ந் உ.

---

## உத்தியோக சம்பந்தமில்லாத அறிவித்தல்.

இன்றைக்கு மூன்று மாதத்தின்பின், நீர்கொழும்பு டிஸ்திறிக்கைச்சேர்ந்த அழுத்கூர்க் கோறளை தூணகபம்றுத் தோப்பிலிருக்கும் மள்கண்காணும்லாகே லக்சிமஷ் லுசியன் சில்வாவாகிய நான் 1907 ம் வருஷம் முதலாம் நொம்பர் கட்டளைச்சட்டத்தின் எட்டாம் பிரிவின் பிரகாரம் றெஜிஸ்றர் ஜெனறல் அவர்கட்கு என்னை யாழ்ப்பாண டிஸ்திறிக் பிரிவில் சிங்களப்பாஷையில் நொத்தாரிஸ் பணிவிடைபார்க்க விடும்படி விண்ணப்பஞ்செய்ய எண்ணியிருக்கிறேன் என்பதை இத்தாலறிவிக்கிறேன்.

இப்படிக்கு,
எம். எம். எல். சில்வா.

1922 ம் வருஷம் மார்கழிமாசம் 9 ந் திகதி.

---

H. R. COTTLE, GOVERNMENT PRINTER, COLOMBO, CEYLON.